தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, சித்திரபானு - திருவள்ளுவர் ஆண்டு 2033

2002 ஏப்ரல் 18, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாந் தலை."

இருப்போர், இல்லாதார் என்றில்லாமல் கிடைத்ததை பகிர்ந்து உண்டு எல்லா உயிர்களும் வாழ வேண்டும் என்ற சமநிலை கொள்கைக்கு ஈடானது வேறு எதுவுமே இல்லை.

1. வினாக்கள் - விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 155, திரு. ப. இளவழகன், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

155—

தூர்வாரும் பணி

***943—திரு. ப. இளவழகன்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், இலந்தைகுடம் பெரிய ஏரியில் ஆக்கிரமிப்பை அகற்றி தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படுமா?

[2002 ஏப்ரல் 18

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்கான விடை. அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், இலந்தை குடம் பெரிய ஏரியில் உள்ள ஆக்கிரமிப்பை 1997-1998 ஆம் ஆண்டில் ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 4 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. அரசின் நிதிநிலைமையைப் பொறுத்து தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படும்.

திரு. ப. இளவழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியத்திலுள்ள இலந்தை குடம் ஏரி 425 ஏக்கர் விஸ்தீரணத்தில் அமைந்துள்ள மிகப் பெரிய ஏரியாகும். இந்த ஏரியினால் பாசனம் பெறக்கூடிய நிலப்பரப்பு 4,750 ஏக்கர்; பல ஆண்டுகளாக தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படாமல், ஏரியிலே நீர்தேங்கி இருக்கக்கூடிய நிலையிலே பார்த்தால்கூட இந்த ஏரி ஆடு தாண்டக்கூடிய ஓர் ஏரியாகக் காட்சியளித்துக்கொண்டிருக்கிறது. எங்களுடைய பகுதி கடலால் சூழப்பட்டிருந்த பகுதி என்பதனால் நிலத்தடி நீரைப் பயன்படுத்துகிறபோது உப்பு நீராக இருப்பதனால் விளை நிலம் இன்றைக்கு உவர் நிலமாக மாறக்கூடிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு தரிசு நிலங்கள் எல்லாம் மேம்படுத்தப்பட்டு விளைச்சல் நிலங்களாக மாறக்கூடிய நிலை இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலையில், விளை நிலமாக இருக்கக்கூடியவை தரம் கெட்டுப் போகாமல் காப்பாற்றப்பட வேண்டிய நிலை இருப்பதனால் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இந்த ஏரி தூர் வாரப்பட்டு சுமார் 5 ஆயிரம் ஏக்கர் நிலமும் விளைச்சல் நிலமாக இருக்கும் நிலையிலிருந்து குறைந்து விடக்கூடாது, அதைக் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர், பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் மாவட்டம் மற்றும் வட்டத்திலுள்ள இலந்தைகுடம் பெரிய ஏரி கந்திராதித்தன் ஏரி பொதுப் பணித்

2002 ஏப்ரல் 18]

துறையின் பராமரிப்பில் உள்ள ஏரியாகும். இந்த ஏரியின் மொத்தப் பரப்பு 413.73 ஏக்கராகும். இதில் ஆக்கிரமிக்கப்பட்ட பரப்பு 30 ஏக்கர். 1997-1998 ஆம் ஆண்டில் ரூபாய் 2 இலட்சம் மதிப்பீட்டில் சுமார் 4 ஏக்கர் நிலங்களில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது. மீதமுள்ள 26 ஏக்கர் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் கரும்பு, நெல் பயிர் செய்யப்பட்டு அவை அகற்றப்படாமல் உள்ளன. வருவாய்த் துறையின் துணையுடன் அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதி அகற்றப்படும் என்பதையும், போதுமான நிதியொதுக்கீடு இன்மையால் தூர்வாரும் பணியைச் செய்ய இயலவில்லை. ஏரியைத் தூர்வாருவதற்கும், கரையைப் பலப்படுத்தி அதன் மேல் கிராவல் பரப்புவதற்கும் தோராயமாக ரூபாய் 50 இலட்சம் செலவாகும் என கணக்கிடப்பட்டுள்ளது. சிறப்பு நிதியொதுக்கீடு கிடைக்கப்பெற்றால் மேற்கண்ட பணியைச் செய்து முடிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 156, திரு. ப. இராஜரெத்தினம், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.*

156—

அணை கட்டுதல்

***970—திரு ப. இராஜரெத்தினம்**:

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் சின்னமுட்லு அணை கட்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வினாவிற்குண்டான விடை. பெரம்பலூர் தொகுதி, வேப்பந்தட்டை ஒன்றியம், மலையாளப்பட்டியில் உள்ள ஆயக்கட்டுப் பகுதிகள் ஏற்கெனவே நன்கு அபிவிருத்தி அடைந்துள்ளன. எனவே புதிதாக நீர்த்தேக்கம் கட்டுவதால்